Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI
SJIF Imapact Factor 3.5 · Monthly
Vol. 12, No. 06 (2026) p391–401 TIRJTS-2026-0030
DOI: 10.63300/tm12052026.19

RESEARCH ARTICLE

புதுக்கவிதைகளில் சமூக அவலங்களும் எதிர்ப்புக் குரல்களும்

Social Evils and Voices of Resistance in Modern Tamil Poetry

Dr. U. Alibava[1,*]

[1] Professor & Head Department of Tamil Studies Bharathidasan University, Tiruchirappalli- 620 024. Tamil Nadu, India.

***Corresponding author:** Dr. U. Alibava, alibavapkm@gmail.com

ORCID iD: Dr. U. Alibava https://orcid.org/0000-0002-2051-7002

ARTICLE INFO

Article history
Received: 28 October 2026
Revised: 29 October 2026
Accepted: 5 November 2026
Published: 12-November 2026

Article ID
TIRJTS-2026-0030

Peer review
Double-blind peer review

Keywords
Modern Tamil Poetry
Social Evils
Social Inequality
Caste Discrimination
Gender Oppression
Poverty
Human Dignity
Resistance
Social Awareness

ABSTRACT

Modern Tamil poetry serves as a powerful medium for registering social realities and questioning the inequalities embedded in everyday life. This article examines how modern poems represent a range of social evils and give expression to voices that resist oppression. It considers the ways in which poets bring into focus poverty, caste-based discrimination, gender inequality, the exploitation of women, unemployment and the hardships faced by ordinary people. The poems discussed in the article also draw attention to the contradictions between social ideals and lived experience, particularly where human dignity, freedom and equal opportunity are denied. Through selected poetic lines, the article highlights the emotional force of poetry as it articulates suffering, protest, questioning and the demand for change. Love and human relationships are also viewed in relation to social expectations and constraints. Rather than treating poetry merely as an aesthetic expression, the discussion approaches it as a form of social observation and critique. The article thus shows how modern Tamil poetry makes marginalized experiences visible, challenges unjust practices and encourages readers to reflect on the need for a more equitable and humane society. It underlines the role of the poet as a sensitive observer of society and of poetry as a medium through which resistance and social consciousness can be voiced.

How to cite this article: Dr. U. Alibava (2026). புதுக்கவிதைகளில் சமூக அவலங்களும் எதிர்ப்புக் குரல்களும். *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 391–401. https://doi.org/10.63300/tm12052026.19

Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் உ. அலிபாவா

பேராசிரியர் & தலைவர், தமிழியல்துறை,

பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620024.

Email : alibavapkm@gmail.com, https://orcid.org/0000-0002-2051-7002

எது புதுக்கவிதை என்ற வினாவிற்கு மு. மேத்தா புதுக் கவிதையின் வாயிலாகவே,

இலக்கணச் செங்கோல்

யாப்புச் சிம்மாசனம்

எதுகைப் பல்லக்கு

மோனைத் தேர்

தனிமொழிச் சேனை

பண்டித பவனி

இவை எதுவுமே

இல்லாத

கருத்துக்கள் தம்மைத்

தாமே ஆளக்

கற்றுக் கொண்ட

புதிய மக்களாட்சி

முறையே புதுக்கவிதை![1]

என்று இலக்கணம் வகுத்துத் தந்துள்ளார். இவ்வாறு மரபு மீறி எழுதப்படும் புதுக்கவிதைகளில் சமூக அவலங்கள் ஏராள மாகப் பிரதிபலிக்கின்றன.

சமூக அவலங்கள்

சமுதாய இயல்புக்கு மாறாக நடக்கக்கூடிய நிகழ்வுகளும், தனிமனிதத் துன்பங்களும், துயரங்களும், இன்னல்களும் சமூக அவலங்களாகும். இது தனி மனிதனுடைய பல்வேறு பிரச்சினைகள், காதல், சாதி, நாடு, அரசியல், அரசியல்வாதிகள், வறுமை என்ற பல்வேறு நிலைகளில் வெளிப்படுகின்றன. இன்றைய புதுக்கவிஞர்கள் இவற்றைத் தங்கள் கவிதைகளில் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றனர்.

காதல்

காதல் இன்றைய சூழ்நிலைகளில் பொழுதுபோக்கு நிகழ்வாக மாறிவிட்டது. நேரத்திற்கு நேரம், நாளுக்கு நாள் காதலுணர்வு மாறுபட்டுக் கொண்டே இருக்கிறது.

இன்றைய ஆடவர்களின் உறுதியற்ற மனநிலையையும், காதலின் பிடிப்பற்ற தன்மையையும் மு. மேத்தா 'தலைகள்' என்னும் தலைப்பில்,

இராமனாகத்தான்

வீட்டிலிருந்து

வெளியே வந்தான்

வீதியில் அடுத்த வீட்டுச் சீதைகள்

அசைந்து நடந்த

அழகைப் பார்த்ததும்

தயங்கித் தயங்கித்

தலைகள் முளைக்கவே

இராவணனானான்,[2]

என்று எடுத்துரைக்கிறார். இவர் 'ஒரு கடிதம் அனாதையாகி விட்டது' என்கிற இன்னொரு கவிதையில் காதல் தோல்வியை,

ஒரு வாரத்திற்குள்

உங்கள்

பதில் வரவேண்டும்

இல்லாவிட்டால்

உயிர்ப் பறவை சிறகடிக்கும்

கடைசி முத்தமிட என் கல்லறைக்கு வரலாம்[3]

என்று திறம்படச் சித்திரித்துக் காட்டுகிறார். இக்கவிதையில் தலைவி ஒரு வாரத்திற்குள் பதில் கேட்கிறாள். ஆனால் இக்கடிதம் ஒரு மாதங்களுக்கு மேலும் அனாதையாய்த் தான் அலைந்து கொண்டிருக்கின்றது. காதலின் எதிர்ப்பைப் புலப்படுத்த விழைந்த மு. மேத்தா,

அண்ணலும் நோக்கினாள்

அவளும் நோக்கினாள்

இரண்டு பேரையும்

அடித்து நொறுக்குவதற்கு

அப்பன் காரனும்

நோக்கினான்![4]

என்று அங்கதச் சுவைபடக் கூறுகிறார்.

தீண்டப்படாத பூ

பொருளாதாரத்தில் நலிவடைந்த பெண்களும், வறுமையின் கோரப்பிடியில் சிக்கி உழலும் பெண்களும் வரதட்சணை கொடுக்க இயலாமல் திருமணமாகாத முதிர் கன்னிகளாகவே முதிர்ந்து விடுகின்றனர். இதனை மு. மேத்தா 'அரளிப்பூ அழுகிறது' என்னும் தலைப்பில்,

பூக்களிலே நானுமொரு

பூவாய்த்தான் பிறப்பெடுத்தேன்

பூவாகப் பிறந்தாலும்

பொன்விரல்கள் தீண்டலையே!

பொன் விரல்கள் தீண்டலையே - நான்

பூமாலை யாகலையே![5]

என்று உருவகிக்கிறார்.

காதலிலும் சமூக நோக்கு

ஊழல், பித்தலாட்டம், வேலையில்லாத் திண்டாட்டம், வரதட்சணைக் கொடுமை போன்றன சமுதாயத்தில் வாழும் பெரும்பாலான மனிதர்களின் மனங்களில் வேரூன்றியுள்ளன. இதனைச் 'சங்கு' என்ற கவிஞர் காதல் கவிதையில்,

அடியே

உன்னை நான் ஊழலைப் போல் நேசிக்கிறேன்

பித்தலாட்டம் போல் நேசிக்கிறேன்

வேலையில்லாத் திண்டாட்டம் போல் நேசிக்கிறேன்

வரதட்சணைக் கொடுமையைப் போல் நேசிக்கிறேன்.

ஏனென்றால்

இந்த நாட்டில்

ஊழலும், பித்தலாட்டமும்

வேலையில்லாத் திண்டாட்டமும்

வரதட்சணைக் கொடுமையுமே

உயர்வாக மதிக்கப்படுகிறது[6]

என்று சமூகப் பிரக்ஞையோடு விமர்சனம் செய்கிறார். மேலும் இவர் காதலில் தோல்வியுற்ற ஆண் மகனைப் பற்றிப் பாடும் ஒரு கவிதையில் காதலில் தோற்ற ஒவ்வொரு தனிமனிதனின் உள்ளார்ந்த பாதிப்புகளும் வெளிப்படுகிறது. இதனை,

பல நாள்

ஆசைப்பட்டு

நான்

பழகிய புல்லாங்குழல் நீ!

நான்

உன்னதமாய்

வாசிக்கு முன்னமே

ஏன்

ஊமையாகிப் போனாய்?[7]

என்ற கவிதை புலப்படுத்துகிறது.

வெற்றி பெறாக் காதல்

'முகம் தெரியாத அவளுக்காக' என்ற கவிதையில் மு. மேத்தா வெற்றி பெறாத காதலை,

என் இதயத் தோட்டத்தில்

ரோஜாக்களைப் பயிரிட்டேன்.

அறுவடை செய்ய

உன்னை அழைத்தேன்

அரிவாளோடு

நீ வந்த பிறகுதான்

என் தவறு

எனக்குப் புரிந்தது![8]

என்று சுட்டிக்காட்டுகிறார்.

நியாயம் கேட்கின்றான்

ஆண்களையும் பெண்கள் காதலில் ஏமாற்றுகின்றனர் என்பதை எடுத்துரைத்துச் 'சங்கு' தன் கவிதையில்,

அடியே

கருக்கொலை செய்வது

பாவம் என்று சொல்லிவிட்டு

இன்று நான்

கனவுக் கருக்களை

சுமந்த பிறகு

அதைக் கலைக்கச் சொல்வது

என்னடி நியாயம்.[9]

என்று கனவுகளைச் சுமந்து கொண்டு நியாயம் கேட்கும் ஆடவனைக் காட்டுகிறார். இவ்வாறு கவிஞர்கள் பலர் தங்களுடைய கவிதைகளில் காதலின் பாதிப்பைப் பல நிலைகளில் பதிவு செய்துள்ளனர்.

வறுமை

வறுமை மனிதனை எல்லாக் கீழ்த்தரமான நிலைக்கும் கொண்டு நிறுத்தும். இதனைத் திருக்குறள், மணிமேகலை போன்ற நூல்கள் தெளிவுறவே மொழிகின்றன. விபச்சாரத்தில் ஈடுபடக்கூடிய விலைமகளிரின் வறுமையை நா.காமராசன்,

நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம்

ஆடை வாங்குவதற்காக[10]

என்று கூறுவது, அவர்களை மனிதக்கண் கொண்டு காண வைப்பதுடன், இரக்க உணர்வையும் ஏற்படுத்துகிறது. உண்மை நிலையையும் எடுத்தியும்புகிறது.

கலைஞர் மு. கருணாநிதியால் பெரிதும் பாராட்டப்பட்ட பொன். இரவீந்திரனின்,

கந்தையானாலும் கசக்கிக் கட்டு

சரிதான்,

காயும்வரை எதைக் கட்டுவது?[11]

என்ற கவிதை இந்தச் சமுதாயத்தில் வாழுகின்ற ஒவ்வொரு வரையும் சிந்திக்கத் தூண்டுவதுடன், சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்போரின் வறுமை நிலையையும் எடுத்துரைக்கிறது.

முதல் தேதி

மாத ஊதியம் பெறும் நடுத்தர வர்க்கத்து மனிதனின் வறுமை நிலையை மு. மேத்தா,

என்னுடைய சம்பள நாளில்

எண்ணி வாங்குகிற

பளபளக்கும் நோட்டுகளில்

எவரெவர் முகமோ

தெரியும்

என் முகத்தைத் தவிர![12]

என்றும்,

இந்த மணியாடர் பாரத்தில்

நான் எழுதப் போகும்

தொகையை

உற்றுப் பார்க்கின்றன

தொலை தூரத்து

கிராமத்தில்

ஒரு தாயின்

தளர்ந்த விழிகள்![13]

என்றும் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

நா. காமராசன் விலைமகளிரின் வறுமை நிலையை மேலும் சில கவிதைகளில் எடுத்தியம்புகிறார். இதனை,

குழந்தையின் பசியை நாங்கள் அறிந்ததில்லை

ஏனெனில்

நாங்கள் பசியின் குழந்தைகள்[14]

என்ற கவிதை வெளிப்படுத்துகிறது.

'நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம்' என்ற கவிதையில் ஈரோடு தமிழன்பன்,

காலை எழுந்தவுடன் படிப்பென்றான்

படிப்பவனுக்கு மட்டும் தான்

காலையே எழுகிறது[15]

என்று குறிப்பிடுவது கல்வியை எல்லோரும் பெறமுடியவில்லை என்ற நிலையைப் பறைசாற்றுகின்றது.

இரா. வேலுச்சாமியின் 'பாரதி மன்னிக்க!' என்ற கவிதை,

தனியொருவனுக்கு

உணவில்லையெனில்

ஜகத்தினை யழித்திடுவோம்...!

என்றாயே பாரதீ...

இன்று

'ஜகத்திற்கே'

உணவில்லையே

எதைப் போய்

அழிப்போம்?[16]

என்று வறுமையில் உலக மக்களில் பெரும்பாலோர் சிக்கித் தத்தளிக்கும் அவல நிலையை நயம்பட எடுத்துரைக்கிறது.

பூமியின் நிர்வாணத்தை மறைக்க உழவுத்தொழில் மேற்கொண்ட விவசாயிக்கு உழக்கரிசிகூட மீதமின்றி, கோவணம் மட்டுமே எஞ்சிய கேவல நிலையை இன்குலாப் சூரியனைச் சுமப்பவர்கள் என்ற கவிதையில்,

வேர்வை இழைகளால்

பூமியின்

நிர்வாணத்தை மறைத்தோம்

இருந்தும்

மிஞ்சாத உழக்கரிசியோடும்

எஞ்சியது எங்கள் கோவணந்தான்.[17]

என்று சமூகப் பிரக்ஞையுடன் சித்திரிக்கிறார். மேலும் இவர் வேர்வை நீரையூற்றி உழைத்தவர்களை வறுமை முட்கள் கீறுகின்றன என்பதை,

தொழிற்சாலைப் பாத்தியில் வேர்வை நீர் ஊற்றி

இயந்திர ரோஜாக்களை மலர வைத்தோம்

இருந்தும்

வறுமை முட்கள் கீறிய வடுக்களே

பாடு பட்டதற்கும் கிடைத்த பரிசுப் புத்தகங்கள்.[18]

என்று எடுத்துரைக்கின்றார்.

சமூகப் பொறுப்புணர்வுமிக்க ஒவ்வொரு கவிஞர்களும் அன்று முதல் இன்று வரை வறுமையின் கோரப்பிடியைச் சித்திரித்துக்காட்டத் தங்களுக்கேயுரிய தனிப் பண்பினைத் தனித்துவத்தைக் கையாண்டுள்ளனர். இதனை மு. மேத்தாவும் சுட்டிக்காட்டுகிறார். இதற்கு, 'காந்தியும் கவிஞனும்: ஒரு சந்திப்பு' எனும் தலைப்பிலமைந்த,

வறுமைத் தீக்குச்சி

எங்கள்

வாழ்க்கையோடு

ஓயாமல் உரசுகிறது

பற்றி எரிவதென்னவோ

எங்கள் பாழும் வயிறுகள்தானே.[19]

என்ற கவிதை சான்றாக விளங்குகிறது. மேலும் வறுமையைப் பல்வேறு கவிஞர்கள் திறம்படச் சித்திரிக்கின்றனர்.

சோறு இல்லாத ஏழையின் நிலையைக் கவிஞனொருவன்,

பல ஏழைகள்

இந்த

விதவையைப் (சோற்றைப்)

பார்த்து

வெகு நாட்களாகிறது.

என்று பதிவு செய்கிறான். உணவில்லா நிலையைச் சுட்டியதோடு நின்று விடாமல், ஆடையில்லாத அவல நிலையையும் புதுக்கவிதை சுட்டுகிறது. இதனை,

இறக்கும் நாளே

எங்கள் திருநாள்

அன்றுதானே

எங்களுக்குப் புத்தாடை கிடைக்கிறது[20]

என்று விநாயகமூர்த்தி குறிப்பிடுகிறார்.

அரசியல்

இன்றைய புதுக் கவிதைகளில் அரசியலும் முக்கியப் பங்காற்றுகிறது. எந்தவொரு மனிதனும் அரசியலை விடுத்துச் செயல்பட முடியாது. இதேபோல் சமூகப்பொறுப்புணர்வு மிக்க எந்தவொரு கவிஞனும் அரசியலையும், அரசியல்வாதிகளையும் விடுத்துப் பாடமாட்டான். ஓட்டுக்கேட்டு வந்து வெற்றி பெற்றுச் சென்ற பின்னர் திரும்பிப் பார்க்காத அரசியல்வாதிகள் ஏராளமாக உள்ளனர். இவர்களை வைரமுத்து,

ஓட்டு மொத்தமாக

ஓட்டு முத்தம் வாங்கிய

துஷ்யந்தர்கள்

மறுநாளே மறந்து போனார்கள்[21]

என்று சாடுகின்றார். ஒரு கவிதையில் ஈரோடு தமிழன்பன் அரசியல்வாதிகளை மலைப்பாம்பாகவும், மக்களை மலைப் பாம்பு தீண்டிய நோயாளிகளாகவும்,

மலைப் பாம்புகள்

தீண்ட

நீலம் பாரித்து

நுரை கக்கித்

துடிக்கும்

நோயாளி[22]

என்ற கவிதையில் சுட்டுகிறார். இக்கவிதை மக்களை அரசியல்வாதிகள் பாம்பு தீண்டுவதைப் போல் தீண்டி வேதனைப் படுத்துவதுடன் கொல்லவும் செய்கின்றனர் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. மேலும் இவர்,

இனி

ஜனநாயகம்

ஜனங்களுக்கே மாலை சூட்டட்டும்

கட்சிகள் வேண்டுமானால்

கை தட்டட்டும்[23]

என்று புதிய சுருதியில் ஒரு பூபாளம் படைக்கிறார்.

புதுவிதமாகத் தனக்கேயுரிய தனித்துவமாக மக்களைப் பார்க்கின்ற பொன். இரவீந்திரன்,

ஒருத்தியைக்

கற்பழிக்க இத்தனை கயவர்களா?

நிலவைச் சுற்றி நட்சத்திரங்கள்[24]

என்று அரசியல்வாதிகள் மக்களைச் சுற்றி வரும் நிலையைச் சுட்டிக்காட்டுகிறார்.

இன்றைய அரசியல்வாதிகளிடம் இலட்சியம், கொள்கைப் பிடிப்பு, உறுதியான கோட்பாடு என்பன எட்டாக் கனியாகவே இருக்கின்றன. சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்கேற்பக் கட்சி மாறும் மனப்பக்குவம் உடையவர்களாகவும் மக்கள் நலனைப் பற்றிச் சிறிதளவும் சிந்திக்காதவர்களாகவும் சுய இலாபங்களுக்கு முக்கியத்துவமளிப்பவர்களாகவும் இருக்கின்றனர். இவர்களை மனதிலிருத்திய மீரா 'வேகம்' எனும் கவிதையில்,

எங்கள் ஊர் எம்.எல்.ஏ

ஏழு மாதத்தில்

எட்டுத் தடவை

கட்சி மாறினார்

மின்னல் வேகம்

என்ன வேகம்?

இன்னும் எழுபது

கட்சி இருந்தால்

இன்னும் வேகம்

காட்டி இருப்பார்...

என்ன தேசம்?

இந்தத் தேசம்?[25]

என்று நயம்பட எடுத்தியம்புகிறார்.

ஆங்கிலேயர்களிடம் சுதந்திரம் பெற்ற பின்னர் நம் நாடு அரசியல்வாதிகளிடம் சிக்கி இன்றும் அடிமைப்பட்டுக் கிடக்கின்றது என்பதை எ. அரங்கநாதனின்,

இரவில் வாங்கினோம்

இன்னும் விடியவேயில்லை

என்ற கவிதை சுட்டிக்காட்டுகிறது. இதே கருத்தை அடியொற்றி விநாயகமூர்த்தி,

இருளின் ஆட்சி

நடக்கும் இரவில்

இந்திய ஆட்சி நமக்குக் கிடைத்ததால்

நல்ல ஆட்சி மலரவில்லையோ![26]

என்ற கவிதையை வடித்துச் சிந்தனையைத் தூண்டுகிறார்.

அரசியல்வாதிகள் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக் கட்டிலில் அமர வேண்டுமென்பதற்காக ஏராளமான வாக்குறுதிகளைச் சிறிதும் சிந்தித்துப் பாராமல் அள்ளி வீசுவார்கள். ஆனால் சொல்லிய வண்ணம் செயல்பட மாட்டார்கள். இதனைச் சுட்டிக்காட்ட விரும்பிய ஞானக்கூத்தன்,

அரசியல்வாதிகளின்

வாய்க் குதங்கள்

வார்த்தை மலங்களைக்

கக்கும் கழிவறை....

என்று அரசியல்வாதிகளைத் தோலுரித்துக் காட்டுகிறார்.

ஒற்றுமையின்மை

பொதுவாக மக்களிடம் சாந்தமும், அமைதியும், சகோதரப் பண்பும் இன்றைய நிலையில் இல்லாமல் போய்விட்டது. சாதி, மத, பேத அடிப்படையிலும் கருத்துக்கள், கொள்கைகள் அடிப்படையிலும் பல்வேறு வேறுபாடுகள் தலை தூக்கிவிட்டன. இதனால் சண்டை சச்சரவுகளும், வன்முறையும், கலவரமும் தாண்டவமாடுவது வாடிக்கையாகி விட்டது. இவ்வாறான சாதாரணக் கருத்து வேறுபாடுகள் கூட மனிதர்களைக் கொலை காரர்களாக மாற்றிவிடும். இதனை மீரா,

இருக்கிறார் கடவுள்

இல்லை கடவுள்?

வாதம் பிறந்தது;

மோதல் வளர்ந்தது.

இப்போது

இல்லை ஒருவர் இங்கே.

இருக்கிறார் ஒருவர்

தலைமறைவாக!

போத்தனூர்க் காவலர்

புலனாய்கின்றார்[27]

என்று திறம்படச் சுட்டுகிறார்.

ஆண் பெண் வேறுபாடு

பெண்களைக் குழந்தைப் பருவம் முதல் வளர்த்துத் திருமணம் செய்து அனுப்புவதற்குப் பெருமளவு பணம் தேவைப்படுகிறது. வரதட்சணையின்றித் திருமணம் செய்து கொள்வதற்கு யாரும் முன்வருவதில்லை. இதனால் சமூகத்தில் ஆணு கொரு மதிப்பும், பெண்ணுக்கொரு மதிப்பும் இருக்கிறது. இதனைக் கந்தர்வன்,

ஆண் பிறந்தால்

அட்சயப் பாத்திரம்

பெண் பிறந்தால்

பிச்சைப் பாத்திரம்[28]

என்று குறிப்பிடுகிறார்.

சாதி வேறுபாடு

ஆண் - பெண்; ஏழை - பணக்காரன் என்பதைப் போன்று தாழ்ந்த சாதி - உயர்ந்த சாதி என்னும் வேறுபாடும் இன்றைய சமுதாயத்தில் உள்ளது. இது மிகப்பெரிய சமூக அவலமாகும். எல்லாப் பிரிவினரும் ஒன்றாகக் கைகோத்துச் செயல்பட வேண்டும். அவ்வாறு செயல்பட்டால்தான் சமுதாயம் சீராக இயங்கும்; இல்லையேல் சமுதாயம் இயங்காது; செத்து மடியும். இதனை எட்டையபுரத்துக் கவிஞன் பாரதி,

நாலு வகுப்புமிங் கொன்றே - இந்த

நான்கினி லொன்று குறைந்தால்,

வேலை தவறிச் சிதைந்தே - செத்து

வீழ்ந்திடும் மானிடச் சாதி[29]

என்று முரசுப்பாட்டில் கூறுகிறான். இதே கருத்தைக் கவிசோதி,

நாங்கள் சேற்றில்

கால் வைக்காவிட்டால்

நீங்கள் சோற்றிலே

கைவைக்க முடியாது[30]

என்று எளிமையாக எடுத்துரைக்கிறார்.

உள்ளத்து உணர்வுகளை ஏற்ற இரக்கமின்றி அப்படியே படைத்துக்காட்டும் புதுக்கவிதைகள் இன்றைய தமிழ் இலக்கியப் பரப்பில் வளர்ந்து செழித்துள்ளன. சாதாரண இலக்கிய ஆர்வலர்களிலிருந்து, புகழ்பெற்ற பெருங்கவிஞர்கள் வரை இவ்வகைக் கவிதைகளைப் படைக்கின்றனர். சமூகப் பிரக்ஞையுடைய எந்தக் கவிஞனும் சமூகத்தில் நிலவும் அவலங்களைக் கண்டு மனம் நொந்து பாடாமலிருக்க மாட்டான். அவ்வகையில் தோன்றியனவே தான் மேற்சுட்டிய கவிஞர்களின் கவிதைகள். இக்கவிதைகள் சமூக அவலத்தைச் சுட்டிக்காட்டுவதோடு நின்றுவிடாமல் அதற்கான தீர்வுகளைப் பற்றி மக்கள் சிந்திக்க வேண்டும் என்னும் நோக்கில் பாடப்பட்டதாகவும் உள்ளது. இவற்றின் மூலமாகச் சமூகம் மாற்றம்பெறும், விழிப்புறும் என்பது திண்ணம்.

அடிக்குறிப்புகள்

References

மு. மேத்தா,ஊர்வலம்,ப.86.
மு. மேத்தா, ஒரு வானம் இரு சிறகு, ப. 46.
மு. மேத்தா, கண்ணீர்ப்பூக்கள், ப. 68.
மு. மேத்தா, ஊர்வலம், ப. 88.
மு. மேத்தா, கண்ணீர்ப்பூக்கள், ப. 42.
சங்கு, ஈரவேள்வி, ப. 23.
மேலது., ப. 79.
மு. மேத்தா கண்ணீர்ப்பூக்கள், ப.96.
சங்கு, ஈரவேள்வி, ப. 70.
நா. காமராசன், கறுப்புமலர்கள், ப. 84.
பொன். இரவீந்திரன், வழிதேடும் விழிகள்.
மு. மேத்தா, ஊர்வலம், ப. 46.
மேலது., ப.46.
நா. காமராசன், கறுப்பு மலர்கள். ப. 85.
ஈரோடு தமிழன்பன், ஒரு வார்த்தை ஏழு ரோஜாக்கள்
இரா. வேலுச்சாமி, குருஷேத்திரம்
இன்குலாப், இன்குலாப் கவிதைகள்.
மேலது.,
மு. மேத்தா, முகத்துக்கு முகம், ப.42
விநாயகமூர்த்தி, எரிநட்சத்திரங்கள், ப. 45.

வைரமுத்து, இன்னொரு தேசிய கீதம், ப. 114.

ஈரோடு தமிழன்பன், புதிய சுருதியில் ஒரு பூபாளம், ப. 57.

மேலது., ப. 58.

பொன். இரவீந்திரன், வழி தேடும் விழிகள்.

மீரா, ஊசிகள், ப. 13.

விநாயகமூர்த்தி, எரிநட்சத்திரங்கள், ப. 40.

மீரா, ஊசிகள், ப. 34.

கந்தர்வன்,கிழிசல்கள், ப. 20.

பாரதியார் கவிதைகள், ப. 235.

கவிசோதி, ஓர் குரல், ப. 20.